கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 289/2014**

திருமதி. வள்ளியாத்தாள் (P.W.–1) **1.04.2025.**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு **26** ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தோட்டம் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். 26ம் பிரதிவாதியை நேரில் பார்த்து உள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். 26ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் பெற முயற்சிப்பதாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரி. அவ்வாறு கிரையம் பெறுவதைப் பொறுத்து கிரைய ஒப்பந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அம்மாதிரி ஒப்பந்தம் எதுவும் தாக்கல் செய்யவில்லை தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 26ம் பிரதிவாதிக்கும் தாவாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவரை தேவையில்லாத தரப்பினராக சேர்த்து மன உளைச்சலுக்கு ஆளாக்கி உள்ளீர்கள் என்றால் தவறு 26ம் பிரதிவாதிக்கு எதிராக தாவா நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மற்ற பிரதிவாதிகள் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.01 18:29:41 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.